# பரதநாட்டியம் - தரம் 08

## பகுதி I

**1. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. த்யானஸ்லோகத்தில் குறிப்பிடப்படும் கடவுள் யார்?
   1. பார்வதி 2. பூமாதேவி 3. சிவன் 4. விஷ்ணு
2. சுகதுண்ட விநியோகத்தில் பாணப்பிரயோகே என்பதன் கருத்து யாது?
   1. மரணம் 2. அம்பு எய்தல் 3. முணுமுணுத்தல் 4. மரம்
3. தலையின் அசைவைக் குறிக்கும் பேதம் எது?
   1. சிரோபேதம் 2. திருஷ்டிபேதம் 3. பாதபேதம் 4. கண்ட பேதம்
4. தெய்யா தெய்யி அடவு அமைந்த தாளம் யாது?
   1. ரூபக தாளம் 2. மட்டிய தாளம் 3. ஏக தாளம் 4. ஆதி தாளம்
5. ஆடை ஆபரணங்களால் வெளிப்படுத்தும் அபிநயம் எது?
   1. வாச்சிகம் 2. ஆஹார்யம் 3. ஆங்கிகம் 4. சாத்விகம்
6. ரூபக தாளத்தின் அங்க அடையாளம் யாது?
   1. I00 2. 0I 3. II00 4. I0I
7. தெய்யும் தத்த தெய்யும் தாம் என்ற சொற்கட்டினை உடைய அடவு யாது?
   1. தட்டடவு 2. குத்தடவு 3. ஊஞ்சல் அடவு 4. நாட்டடவு
8. அடிப்படை பாதபேதங்கள் எத்தனை?
   1. 3 2. 4 3. 5 4. 7
9. பின்வரும் நடனங்களில் தொழில்சார் நடனம் எது?
   1. காவடி 2. கரகம் 3. கொழுந்து நடனம் 4. கும்மி
10. அம்மனுக்குரிய பக்தி சார்ந்த கிராமிய நடனம் யாது?
    1. கோலாட்டம் 2. கும்மி 3. காவடி 4. வேப்பிலை நடனம்
11. பூப்பறித்தலை அபிநயிக்க பயன்படும் முத்திரை யாது?
    1. பதாகம் 2. கடகாமுகம் 3. மயூரம் 4. சதுரம்
12. கழுத்தின் அசைவைக் குறிக்கும் பேதம் எது?
    1. சிரோபேதம் 2. திருஷ்டிபேதம் 3. பாதபேதம் 4. கண்ட பேதம்
13. கோர்வை அடவு என அழைக்கப்படும் அடவு யாது?
    1. தத்தெய்தாம் அடவு 2. தாதெய் தெய்த அடவு 3. குத்தடவு 4. நாட்டடவு
14. திருஷ்டி பேதம் எத்தனை வகைப்படும்?
    1. 6 2. 7 3. 9 4. 8
15. வேடனும் புறாவும் என்ற பாடல் எவ்வகைப்பாடல்?
    1. பக்திப்பாடல் 2. கதைப்பாடல் 3. நாட்டியப்பாடல் 4. ஸ்லோகம்

## பகுதி II

1. சிரோபேதம் அல்லது திருஷ்டி பேதத்தினை செய்முறை விளக்கத்துடன் அட்டவணைப்படுத்துக.
2. நால்வகை அபிநயங்களை குறிப்பிட்டு வாச்சிக அபிநயம், சாத்விக அபிநயம் பற்றி விளக்குக.
3. பின்வரும் ஹஸ்தங்களின் விநியோகங்களை கருத்துடன் தருக.
   1. முஷ்டி 2. கபித்தம் 3. கடகாமுகம்
4. சிறுகுறிப்பு எழுதுக.
   1. பாத்திர இலட்சணம் 2. அபாத்திர லட்சணம்
5. தெய்யா தெய்யி அடவினை திரிகாலத்தில் எழுதுக.
6. தொழில்சார் நடனங்களை குறிப்பிட்டு அவை தொழிலை சித்தரிக்குமாற்றை விளக்குக.
7. இசைக்கருவிகளை வகைப்படுத்தி அவற்றுக்கு உதாரணம் தருக.
8. மங்கள வாத்தியமான நாதஸ்வரம் எனும் இசைக்கருவி பற்றி விளக்குக.
9. இலங்கையில் பரதநாட்டியம் பற்றி உமக்குத் தெரிந்தவற்றை விளக்குக.